[1984 மார்ச் 21

நெரிசல் நேரங்களில் அண்ணா சாலையில் லாரிப் போக்குவரத்தைத் தடை செய்யும் திட்டம்.

377—(*வினா எண் 12517) திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை, அண்ணா சாலையில் அதிக அளவில் விபத்துக்களைத் தடுப்பதற்கு நெரிசல் நேரங்களில் லாரிகளை ஓட்டிச் செல்வதற்குத் தடை விதிக்கும் எண்ணம் அரசு ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: அண்ணா சாலையின் இரு பகுதிகளில் காலையிலும் மாலையிலும் இரண்டு மணி நேரம் லாரிப் போக்குவரத்துத் தடை செய்யப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, காலையிலும், மாலையிலும் இரண்டு மணி நேரம் லாரிப் போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளதாகச் சொன்னார்கள். முழு நேரமும் தடை செய்யப்படுமா? ஆட்டோ, சைக்கிள் ரிக்ஷா, எருமை மாடு எல்லாம் போகின்றன. அதனாலும் விபத்து ஏற்படுகிறது. சிலுக்கு சுமிதா, அனுராதா போன்றவர்களுடைய கவர்ச்சிப் படங்கள் ஆங்காங்கே வைக்கப்பட்டுள்ளதால் அதைப் பார்த்துக் கொண்டே ஓட்டும்போது விபத்து ஏற்படுகிறது. தனியார்கள், தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள் அடிக்கடி அந்த வழியாக ஊர்வலம் நடத்துவதினாலும் விபத்து ஏற்படுகின்றது. சினிமா கொட்டகைகள் நிறைய உள்ளன....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை எல்லாம் மானியக் கோரிக்கையில் விரிவாகப் பேசலாம். இது மானியக் கோரிக்கை இல்லை. விபத்து ஏற்படுவதற்கான காரணங்களை எல்லாம் இப்போது சொல்லிக் கொண்டிருக்க முடியாது. சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி: ஓட்டல்கள் நிறைய அந்தப் பகுதியில் இருக்கின்றன. பெரிய அளவுக்கு நெரிசல் ஏற்பட்டு அதனாலும் விபத்து ஏற்படுகிறது. ஆகவே, சினிமா கொட்டகை, பெரிய ஓட்டல்கள் லைசென்ஸ்கள் ரத்து செய்யப்படுமா? லாரிப் போக்குவரத்தை முழு நேரமும் தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

1984 மார்ச் 21]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, எத்தனையோ ஆண்டுகாலமாக நடந்துகொண்டிருக்கின்ற இந்தக் காரியங்களை ஒரே நிமிடத்தில் ரத்து செய்ய வேண்டுமென்று சொல்லி முடித்துவிட்டார்கள். அவர்கள் மூலக் கேள்வியில் கேட்டிருப்பது லாரி போக்குவரத்துப்பற்றியது. அது சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கையைத் தெரிவித்தேன். மற்றப் பிரச்சினைகளையும் மூலக் கேள்வியில் கேட்டிருந்தால் பதில் சொல்லியிருக்க முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதில் பெரும்பாலானவைகளுக்கு நம்மால் நடவடிக்கை எடுக்க முடியாது ; எடுக்கின்ற வாய்ப்பும் இல்லை. லாரிப் போக்குவரத்தை குறிப்பிட்ட நேரத்திற்குத் தடை செய்திருப்பதால் இப்போது விபத்துக் குறைந்திருக்கிறது. முழு நேரமும் தடை செய்வதற்கான வாய்ப்பு இல்லை ; நெரிசல் நேரத்தில் மட்டும் தடை செய்யப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, அண்ணா சாலையில் பாதாளப் போக்குவரத்து சாலை ஒன்று அமைத்தால் நெரிசல் குறைந்து விபத்துக்களைத் தடுக்க முடியும். அது மட்டுமல்ல. அண்ணா சாலையை விரிவுபடுத்த வேண்டும். இரண்டு பக்கங்களிலும் இருக்கின்ற கட்டிடங்கள் மிகவும் பழமையானவை. அவைகளை எல்லாம் இடித்து எறிந்துவிட்டு, அகலமான புதிய சாலை அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அண்ணாசாலைப் பக்கமே போகாமல் இருக்க முடிவு செய்துவிட்டார்கள் என்று கருதுகிறேன். அவ்வளவு கட்டிடங்களையும் நம்மால் இடித்தெறிய முடியாது. இந்தப் பிரச்சினையை வேறு எப்படித் தீர்ப்பது என்பதுபற்றி அரசு ஆலோசனை செய்யும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவரவர்களே, லாரிகளைப் பொறுத்தவரையில் அதிக உயரத்தில் லோடுகள் வைத்து, அதன் காரணமாக விபத்துகள் ஏற்படுகின்றன. அதைப் போன்று இரவு நேரங்களில் ஒரே டிரைவர் 8 மணி நேரத்திற்கு மேல், தூங்காமல் தொடர்ந்து ஓட்டக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதனாலும் அதிர்ச்சி ஏற்பட்டு, விபத்து ஏற்படுகிறது. அதைத் தடுக்க, தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமா ? அதைப்போன்று இரவு நேரங்களில் லாரிகளில் இரண்டு டிரைவர்களை கட்டாயமாக வைத்து ஓட்ட வேண்டுமென்ற விதி தீவிரமாகச் செயல்படுத்தப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அண்ணாசலையில் ஏற்பட்ட விபத்து பற்றியது மூலக் கேள்வி. நீங்கள் இரண்டு டிரைவர்களை வைத்து ஓட்டச் சொன்னால் என்ன பதில் கிடைக்கும் ?

திரு. மி. வின்சென்ட் : தலைவரவர்களே, சென்னை அண்ணாசாலையில் அதிக அளவில் ஏற்படுகின்ற விபத்துக்களைத் தடுக்க காமராஜர் சாலையில் இரும்பு சுவர் போட்டிருப்பது போன்று அண்ணாசாலையிலும் அண்ணா சிலையிலிருந்து கலைக்கல்லூரி வரையில் இருமபு சுவர் போடப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, லாரி விபத்தைப் பற்றித்தான் கேட்டிருக்கிறார்கள் மூலக்கேள்வியில். அண்ணாசாலையின் நடுவில் இரும்புக்கமபி போடுவதாக இருந்தால் இரண்டு பக்கமும் அகலம குறைந்து போக்குவரத்துக்கு சிரமமாக இருக்கும். அதை பரிசீலனை செய்து பார்த்து, தேவை என்றால் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ப. தீர்த்தராமன் : தலைவர் அவர்களே, அண்ணா சாலையின் இரு மருங்கிலும் இருக்கின்ற நடைபாதைகளில் கடைகளும், அதற்கு மேலாக, பிச்சைக்காரர்களின் நெரிசலும் அதிகமாக இருக்கிறது. அதனால் நடைபாதைகள் தடுக்கப்பட்டு, பொதுமக்கள், வாகனங்கள் செல்லவேண்டிய இடங்களில் நடக்கவேண்டியுள்ளது. அவைகளையெல்லாம் அகற்றி நடைபாதையில் மக்கள் நடப்பதற்கும், வாகனங்கள் செல்லும் பாதையில் வாகனங்கள் செல்வதற்கும் அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவையெல்லாம் உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் கேட்க வேண்டிய கேள்வி.

பெரியகாடம்பட்டியில் ஆரம்பிக்கப்பட்ட சேகோ (Sago) தொழிற் கூட்டுறவுச் சங்கம்.

385—(*வினா எண். 18201) திரு. செ. செம்மலை : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் தாரமங்கலம தொகுதியில் பெரிய காடம்பட்டியில் ஆதிதிராவிடர்களுக்கென்று ஆரம்பிக்கப்பட்ட சேகோ (Sago) தொழில் கூட்டுறவுச் சங்கம் எப்போது பணியைத் தொடங்க உள்ளது ?

(ஆ) மேலும் அந்தத் தொகுதியில் எத்தனை இடங்களில்—அதுபோன்ற கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?